# 1. காலொடிந்த கொக்கு



முன்னொரு காலத்தில் ஏழை ஒருவனிருந்தான். அவனுக்குக் கொஞ்சம் நிலமிருந்தது. அதைத் தன் ஜீவனோபாயமாகக் கொண்ட அவன் இரவு பகலாக அதில் பாடு பட்டு வந்தான்.

வசந்த பருவம் வந்தது. வழக்கம்போல நிலத்தை உழத் தொடங்கினான் அந்த ஏழை. அப்போது தற்செயலாக ஆகாயத்தை நோக்கினான் அவன். ஒரு கொக்கு பறந்து கொண்டிருப்பதைக் கண்டான் அந்தக் கொக்கு உழவோட்டப் பட்டிருந்த கழனியை நோக்கி வந்தது. ஆனால் அது உடனே பூமியில் தொப்பென்று விழுந்து விட்டது. அதைப் பார்த்து ஏழை அங்கு விரைந்து ஓடினான். அதன்

நாணயங்களை எல்லாம் எடுத்துத் தன் விருந்தாளிகளுக்கு பங்கிட்டுக் கொடுத்தான். அவர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வீடு சென்றனர். மூன்று முலாம் பழக் கொடிகள் ஒவ்வொன்றிலும் பத்துப் பத்து முலாம் பழங்கள் கனிந்தன. அவை அனைத்திலுமிருந்தும் தங்க நாணயங்கள் கிடைத்தன. ஏழை பெரிய பணக்காரனாகி விட்டான்.



பக்கத்தில் ஒரு செல்வந்தன் வசித்து வந்தான். அவன் இந்தக் குடியானவனிடம் வந்து, “நீ எப்படி இவ்வளவு பெரிய பணக்காரனாக ஆனாய்?” என்று கேட்டான்.

# 2. பூனைக் குட்டிகள்



சிறுவர்கள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு பூனைக் குட்டி அங்கு வந்தது. அது பசியினால் கத்திக் கொண்டிருந்தது. பல நாள்கள் சாப்பிடாமல் அதன் உடல் மெலிந்து காணப்பட்டது.

அல்யான் என்ற சிறுவன் பூனைக் குட்டியை கையில் எடுத்தான்; “நான் என் வீட்டுக்குக் கொண்டு செல்வேன். ஆனால், என் அம்மா அனுமதிக்க மாட்டாள்” என்றான்.

அறிமுகம் செய்து கொண்டன: இரண்டும் வெகுநேரம் காட்டில் உலாவின: அவற்றின் பைகள் நிரம்பும் வரை பழங்களைச் சேகரித்தன.

நாம் சற்று களைப்பாறுவோமோ! என்றது நிலா.

சரி! நீ வேண்டுமானால் ஓய்வு எடுத்துக்கொள்: அதற்குள் நான் போய் இன்னும் கொஞ்சம் பெர்ரி பழம் சேகரிக்கிறேன் என்றது குமாரி பறவை.



உடனே நிலா மிருதுவான புல்வெளியில் படுத்து ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கியது. பறவை நிலாவின் அருகில் சென்று உற்றுப் பார்த்தது. நிலாவின் அழகைப் பார்த்து மயங்கிப் போன பறவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தது.

அப்பாவி நாரையே! இரண்டே கால்கள், ஒரே ஒரு யோசனையுடைய சிறிய தலை. இவ்வளவுதானே உன்னிடம் இருப்பது! என்னைப் பார்! நான்கு கால்கள், இரண்டு காதுகள், வாய் நிறைய பற்கள் என் தலையிலோ நூற்றுக் கணக்கான யோசனைகள். அழகான, அடர்ந்த வால் இவ்வளவும் என்னிடம் உள்ளன என்றது நரி.

நாரை மிகவும் வருத்தப்பட்டது. விரக்தியுடன் ஆகாயத்தைப் பார்க்க அலகை மேலே தூக்கியது. அப்பொழுது ஒரு வேடன் வில், அம்புகளுடன் வருவதைப் பார்த்தது.



இம்முறை, மிகவும் கோபமடைந்த பணக்காரன் சேவலைப் பிடித்துக் குதிரைத் தொழுவத்தில் போடச் சொன்னான். ஆனால் இப்போது என் பங்கு என்று சொல்லியபடி கரடி குதிரை தொழுவத்திற்குள் சென்று குதிரைகளைக் கடித்துக் கொன்று விட்டது.

அடுத்த நாளும் சேவல் பழையபடி கதவின் மீதிருந்து பாடியது.

